# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

OCTOBER
2025




**C.S.I. TAMIL CHURCH SHARJAH**
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 7 |
| திருமறை தியானம் | 9 |
| Restoring God | 12 |
| இனிய இல்லறம் | 14 |
| Church History | 17 |
| திருமறையைத் தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 22 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 24 |
| Daily Bible Reading | 26 |
| வழிபாட்டுத் தியானப் பொருள் | 27 |



# From the Presbyters Desk

இயேசு கிறிஸ்துவின் இனிதான திருப்பெயரினால் தங்களுக்கு என் அன்பின் வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.!

தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் நலமுடன் இருப்பீர்கள் என்று ஆண்டவருக்குள் நம்புகின்றேன், நானும் என் குடும்பத்தாரும் திருச்சபையுமாய் இணைந்து உங்களுக்காக ஆண்டவரிடத்தில் தொடர்ந்து இறைவேண்டல் செய்கின்றோம். ஆண்டவர் மெலன்மேலும் தங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவராக.

ஆண்டவருடைய அளவற்ற அருளினாலும் தங்களுடைய ஊக்கமான இறைவேண்டலினாலும் நம்முடைய திருச்சபையின் ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த மாதம் முழுவதும் நடைபெற்ற நமது எல்லா ஊழியங்களிலும் ஆண்டவர் பெரிய செயல்களைச் செய்தார் அதற்குக் காரணம் தாங்களே தாம், தங்களின் ஊக்கமான இறைவேண்டலினால்தான் நம்முடைய திருச்சபையின் ஊழியங்களில் வல்லமையான செயல்களை ஆண்டவர் நிறைவேற்றுகின்றார்.!

கடந்த செப்டம்பர் மாதத்திற்கான வாக்குதத்த வழிபாடு ‘கூகுள் மீட்டில்’ ஒன்றாம் தேதி காலை ஐந்து மணி முதல் ஐந்தரை மணி வரை நடைபெற்றது அதில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு இறையாசியைப் பெற்றுக் கொண்டனர். மேலும் செப்டம்பர் மாதம் முதல் வாரம் ஞாயிறு

திருவழிபாட்டில் அல் ஐன் அமீரகத்தின் சிஎஸ்ஐ தமிழ்த் திருச்சபையின் ஆயர் அருள்திரு. பக்த தியாகராஜன் கலந்துகொண்டு இறைச் செய்தியைப் பகிர்ந்தளித்தார், மேலும் அவர்களது திருச்சபையில் நடைபெறும் அறுவடை திருவிழாவிற்கு நம்மைச் சிறப்பு அழைப்பாளராக அழைத்துள்ளார், ஆயர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




மேலும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை நாம் பெண்கள் ஞாயிறாக கைக்கொண்டோம். அதில் நம்முடைய திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் முழு வழிபாட்டையும் நடத்திக் கொடுத்தனர்.





கூடுதலாக பரட்டையின் சிறப்புப்பாடல், சிறப்பு குறு நாடகம் என நிகழ்ச்சிகளை நடத்தி “பாலியல் சமத்துவத்திற்கான உமது அரசு வருக” என்ற தலைப்பின் கீழாக நம்மைச் சிந்திக்கத் தூண்டினார்கள், அவர்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நான்காவது ஞாயிற்றுக்கிழமை நாம் முதியோர் ஞாயிறாக

கைக்கொண்டோம் அதில் சிறப்புச் செய்தியாளராக நமது திருச்சபையின் ஊழியர் திரு. இராபர்ட் பொன்சிங் ஐயா சிறப்புச் செய்தி அளித்தார். அந்த நாளிலே நமது திருச்சபையில் உள்ள மூத்தோருக்கு நூல்கள் சிறப்பு அன்பளிப்பாக வழங்கினோம்.




செப்டம்பர் மாதத்திற்கான முதல் வெள்ளிக்கிழமை 24 மணி நேர இறைவேண்டல் மிகச் சிறப்பாய் நடைபெற்றது. மேலும் இரண்டாவது வெள்ளிக்கிழமை நடைபெறும் முன் இரவு இறைவேண்டல் 12-ஆம் தேதி நடைபெற்றது அதில் தென்னிந்தியத் திருச்சபை சென்னைப் பேராயம் திருநின்றவூர் குருசேகரத்தைச் சார்ந்த மூத்த ஊழியர் திரு பாலசுந்தரம் சிறப்புச் செய்தி அளித்தார், அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் வழக்கத்தின்படி இரண்டாம் சனிக்கிழமை செப்டம்பர் 20-ஆம் நாள் உபவாச ஜெபம் நடைபெற்றது அதில் “வனாந்தரத்தின் வழித்தடம்” என்கின்ற தலைப்பில் தொடர்ந்து சிந்தித்து வருகின்றோம். இந்த மாதம் ஆகாருடைய வாழ்வைக் குறித்து அவருடைய வாழ்வில் வனாந்தரத்தில் இடைப்பட்ட கடவுளைக் குறித்தும் ஆகார் “எல்ரோயி” என்று கடவுளுக்குப் பெயர் வைத்தது

குறித்தும் ஆழ்ந்து சிந்தித்தோம், கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களுக்கு ஒரு நற்செய்தி தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன் ஆண்டுகள் பலவாக தொய்விலிருந்து நம்முடைய "PRAYER CELL" குழுவை புத்தாக்கம் செய்துள்ளோம். கடந்த மாதங்களில் சிறப்பாய் செயல்பட்ட அஜ்மன் PRAYER CELL இருந்து முதலில் தொடங்கினோம் அதனைத் தொடர்ந்து நேஷனல் பெயிண்ட் முவைலா பகுதிகளில், தொடர்ந்து அபூசகரா அல்மஜாஸ் காஸ்மியா பகுதிகளில் PRAYER CELL புத்தாக்கம் பெற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த மாதத்தில் ரோலா அல்மஜாஸ் இரண்டு பகுதிகளிலும் அல்நாதா ஷார்ஜா பகுதிகளிலும் துபாய் பகுதிகளிலும் அடுத்த திட்டமிட்டுள்ளோம் இந்த ஊழியங்களுக்காக தொடர்ந்து வேண்டிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இனிவரும் காலங்களில். இந்த ஊழியங்கள் சிறப்பாக நடைபெற ஆண்டவர் நமக்குத் தொடர்ந்து அருள் பாராட்டுவாராக.

கடந்த செப்டம்பர் மாதத்தில் இருந்து நம்முடைய இளையோர் திருச்சபையை (JUNIOR CHURCH) விடுமுறைக்குப் பிறகு தொடங்கியுள்ளோம். இந்த ஆண்டு நூற்றியிருபதுக்கும் அதிகமான பிள்ளைகள் கலந்து கொண்டு வருகிறார்கள், அவர்களை அனுப்பி வைக்கிற பெற்றோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மிகச் சிறப்பாக வழி நடத்துகிற இயக்குநர் ஆசிரியர்கள் தன்னார்வலர்கள் யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய அறுவடை பண்டிகைக்காக திருச்சபையாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.இதற்கான தேவைகள் அதிகமாக உள்ளன மேலும் இவை நடத்துவத்தில் உள்ள தடைகள், கடினப்பாடுகள் உடைக்கபட, இந்த ஆண்டு நம்முடைய குடும்பப் பண்டிகையாம் அறுவடை பண்டிகை மிகச் சிறப்பாக நடைபெறுவதற்காக உங்கள் ஜெபங்களில் தாங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டவரின் அருளும், ஆசியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. A.F.ஆமோஸ் இலாசரஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்கள் அனைவருக்கும், அன்பின் வாழ்த்துதலை, தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த செப்டம்பர் மாதம் முழுவதும், நம்மையும் நம் குடும்பத்தினரையும், செவ்வனை பாதுகாத்து, இந்த புதிய அக்டோபர் மாதத்தை காண கிருபை செய்ததற்காக, ஆண்டவருக்கு நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுக்கிறேன்.

கடந்த மாதம் முழுவதும் நமது சபையின் நிகழ்வுகள் அனைத்தையும், நேர்த்தியும் கிரமமுமாக நடத்த கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பாக எல்லா வியாழன் இரவுகளிலும் நமது சபையின் முகாம் சகோதரர்களை சந்திக்க, அதற்கான ஏற்பாடுகளை செய்து, தவறாமல் சென்று வருகிற சகோதரர்களுக்காக, ஆண்டவரை துதிக்கிறோம். சமயம் வாய்க்கும் போது, தங்களால் இயன்றவர்கள் இந்த ஊழியத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சில வருட இடைவெளிக்கு பின்பு, கடந்த மாதத்திலிருந்து நமது சபையின், Cell Group Meetings, தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கான சிறப்பான முயற்சிகளை. கீழே கொடுக்கப்பட்டுள்ள நமது 7 செல் குரூப்பின் லீடர்கள் எடுத்தார்கள், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கீழே கொடுக்கப்பட்டுள்ள 7 செல் குரூப்களில், சபையினர், தங்கள் வசிப்பிடத்தின் பகுதியை வைத்து, அந்த பகுதியில் உள்ள செல் குரூப் லீடரை தொடர்பு கொண்டு, தொடர்ந்து தங்கள் குடும்பத்தில் ஆண்டவர் கிருபையாய் அருளிச் செய்யும், ஆசீர்வாதங்களுக்காகவும், சுக பலனுக்காகவும், பிறந்தநாள், திருமணநாள், மற்றும் பல்வேறு, சந்தோஷ தருணங்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றியை செலுத்தும் விதமாக Cell Group Meetings நடத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| CSI- TAMIL CHURCH, SHARJAH.- PRAYER CELL DETAILS | | | |
|---|---|---|---|
| # | PRAYER CELL- AREA | LEADER NAME | CONTACT # |
| 1 | ABU SHAGHARA | Bro. Samuel Sathya | 050 7868755 |
| 2 | AJMAN | Bro. Reuban Nallathambi | 056 2044580 |
| 3 | AL NAHDA - SHARJAH | Bro. Jebasingh | 056 5471343 |
| 4 | AL QASMIA | Bro. Paul Deniser | 056 9544376 |
| 5 | DUBAI | Br. Rajesh Kumar | 050 7287967 |
| 6 | ROLLA & AL QASMIA-1 | Bro. Sathish Rajkumar | 050 4757112 |
| 7 | NATIONAL PAINT & MUWEILAH | Bro. Abil Qubilius | 505184254 |

தொடர்ந்து அறிவிப்புகளில். தெரிவித்தபடி நமது சபையின் தகவல் தரவுகளில், சபையார் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின், பிறந்தநாள் மற்றும் திருமண நாள் தேதிகளை சரியான முறையில் குறித்து வைத்து சபை ஆராதனைகளில் அவற்றை நினைவு கூர்ந்து ஜெபிப்பதும். மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே, சபையார் மேலே குறிப்பிட்ட தகவல்களை பகிர்வதற்காக, வாட்ஸ் அப்பில் பதிவேற்றம் செய்யப்பட்ட Google Form, அல்லது திருச்சபையில் வைக்கப்படும் படிவங்களையோ, பூர்த்தி செய்து, விரைவில் தருமாறு, அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கோடை விடுமுறைக்கு பின்பு, கடந்த மாதத்திலிருந்து நமது சபையின் ஜூனியர் சர்ச் வகுப்புகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. சபையார் தங்கள் பிள்ளைகளை ஜூனியர் சர்ச்சுக்கு தவறாமல் அனுப்பி பிள்ளைகளை கர்த்தருடைய போதனைகளில் நடத்த உதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

எதிர்வரும் நமது சபையின் அறுவடை பண்டிகைக்காக சபையார் தொடர்ந்து ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பண்டிகையை சிறப்பாக நடத்துவதற்கு எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

மேலும் இந்த புதிய அக்டோபர் 2025 மாதத்தையும் கர்த்தர் நமது சபையினருக்கு, ஆசிர்வாதமான மாதமாக அருளிச் செய்வாராக. ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**திரு.சுரேஷ் பிச்சைமணி**
☎ +971566960480



# மீட்டெருக்கும் ஆண்டவர்

அன்புக்குரியோரேஆண்டவர் நம்மை மீண்டும் ஒரு புதிய மாதத்திற்குள்ளாக கொண்டு வந்திருக்கிறார் ஆண்டவருக்கே போற்றுதல் உண்டாவதாக அவருடைய அருள் தான் இம்மட்டும் நம்மைத் தாங்கி நடத்தி வருகின்றது ஒவ்வொரு நாளும் அவருடைய அருள் நமக்கு மிகவும் தேவை அதனால் தான் ஒவ்வொரு மாதமும் இந்த மாதத்தில் ஆண்டவர் நமக்கு என்ன வாக்குதத்தம் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து அதை சொந்தமாக்கிக் கொண்டு மன்றாடி இந்த மாதத்தை நாம் கடந்து விடலாம் என்று ஆவலோடு அவருடைய வாக்குதத்தற்காக காத்திருக்கின்றோம்.

இந்த மாதத்திற்காக நான் இறைத்திருமுன் அமர்ந்து உங்களுக்காக மன்றாடிய பொழுது ஆண்டவர் நமக்குக் கொடுத்த வாக்குதத்தம் யோவேல் இரண்டாம் அதிகாரம் 25 ஆம் வசனம், "நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்." ஆகவே கலங்காதீர்கள், ஏனென்றால் ஆண்டவர் உங்களைப் பார்த்து என் மகனே என் மகளே நீ இழந்து போனது நான் உனக்கு இந்த மாதத்தில் திரும்ப அளிப்பேன் என்று இந்த வாக்குத்தத்தின் வழியாக நமக்கு வாக்குக் கொடுக்கின்றார்.

யோவேல் பகுதியில் நாம் வாசிக்கும் பொழுது அது ஒரு நம்பிக்கையின் செய்தியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்களை அழைத்து வந்த யாவே கடவுளை விட்டு வேற்று தெய்வ வழிபாடுகள், விக்கிரக ஆராதனை என்று கடவுளை மறந்த மக்கள் மறுபடியும் கடவுள் இடத்தில் திரும்பி வரும்போது கடவுள் அவருடைய வாழ்வில் இருக்கின்ற வறட்சி, தோல்வி, ஏமாற்றங்கள் எல்லா பாதிப்புகளை மாற்றி ஒரு புதிய தொடக்கத்தையும் நல்வாழ்வு அளிப்பதாக ஆண்டவர் கூறும் உறுதிமொழி. அவர்கள் இழந்து போனதை மீட்டுருவாக்கம் தந்த ஒரு புதிய வாழ்வை வாக்குப்பண்ணுகின்றார்.

நம்முடைய வாழ்விலும் பல நேரங்களில் நம் கடவுளை மறந்து உலகத்தைச் சார்ந்து கடவுளுடைய வழியை விட்டு விலகிப் போகின்றோம். மேலும் அவை நம்மை அழிவு, தோல்வி, ஏமாற்றம், மன வேதனைக்கு நேராக கொண்டு

போய் நிறுத்தும். இப்படிபட்ட தருணத்தில் நாம் இருப்போமென்றால் நாம் செய்த தவறை உணர்ந்து நம் கடவுளிடத்தில் திரும்பி வரும் போது அவர் நம்மை ஏற்றுக் கொள்கின்றார். அது மட்டும் இல்லாமல் நம்முடைய பாவங்களை மன்னித்து நமக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தந்து நாம் இழந்து போனதை நமக்குத் திருப்பி அளிக்கின்ற ஆண்டவராக இருக்கின்றார்.

நம்முடைய வாழ்வில் சில நேரங்களில் சரிவுகளைச் சந்திக்கும் போது, தோல்வியின் பாதைகளில் நாம் பயணமாகும் போது நம்முடன் நெருக்கமாக இருந்தவர்கள், நம்மிடம் நன்மைகள் அனுபவித்தவர்கள் நமக்கு எதிராக மாறக் கூடும், அவர்களே நம்மை அழிக்க பெரிய கூட்டத்தைகா கூட்டி இருப்பார்கள் இப்படி பட்ட சூழல்களில் நமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை நமது ஆண்டவர். 1 சாமுவேல் 30:1-20 வரை தாவீதும் அவரது படைவீரர்களும் வெளியே சென்று சிக்லாக்கு திரும்பி வந்து கொண்டிருக்கும்போது அமலேக்கியர் சிக்லாக்கின் மீது படையெடுத்து, தாவீதின் மக்களையும் அவர்களது பெண்கள் சிறியோர் பெரியோர் அனைவரையும் சிறைப்பிடித்து ஒருவரையும் கொன்று போடாமல், அவர்களைக் கூட்டிக்கொண்டு சென்றனர்.

தாவீதும் தம் ஆள்களுடன் நகருக்குத் திரும்பி வந்து பார்க்கும்போது அந்த நகரமே நெருப்பால் அழிக்கப்பட்டு இருப்பதையும், தங்கள் மனைவியர் பிள்ளைகளைச் சிறைபிடிக்கப்பட்டு இருப்பதையும் பார்த்து தாவீதும் அவருடைய மக்களும் அவருடைய வலிமை இருக்குமட்டும் அழுது புலம்பினார்கள். தாவீது தம்முடைய எல்லாவற்றையும் இழந்து தனித்திருந்த சூழ்நிலையில், தாவீதுடன் இருந்த அவருடைய படை வீரர்கள் அவர்களுடைய குடும்பத்தாரை இழந்த வருத்தத்திலேயே தாவீதுக்கு எதிராக செயல்படுவதை நாம் பார்க்க முடிகிறது. ஆறாம் வசனத்தில் நாம் பார்க்கும் பொழுது அவர்கள் தாவீதைக் கல்லால் எரிய வேண்டும் என்று பேசிக்கொண்டனர். ஆனால் தாவீது அதை பற்றி கவலைப்படாமல் ஆண்டவர் மீது கொண்ட நம்பிக்கையினால் குருவான அபியத்தாரிடத்திலிருந்து ஏபோத்தைக் பெற்றுக்கொண்டு கடவுளுடைய பாதத்தில் உட்கார்ந்து,ஆண்டவரின் பாதத்தில் தம்மை ஆற்றல்படுத்திக் கொண்டார். ஆண்டவருடைய பலத்தினாலே தாவீது அந்தக் கூட்டத்தைப் பின்தொடர்ந்து போகின்றார் அதுமட்டுமல்ல அவர்களுக்கு எதிராக யுத்தம் மேற்கொண்டு அவர் இழந்து போன எல்லாவற்றையும் திருப்பிக் கொள்கின்றார். தாவீது ஆண்டவருடன் இருந்ததினாலே அவர் மீட்டுக் கொண்டு வந்த தம்முடைய எல்லாவற்றையும் தமக்கு முன்பாக நிறுத்தி இது தாவீதின் கொள்ளை என்று சொல்லி ஆண்டவரைப் புகழ்ந்து போற்றினார்.

நம்முடைய வாழ்விலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் போராட்டங்கள் பிரச்சனைகள் வரும் பொழுது நாம் அவைகளைக் குறித்துக் கவலைப்படாமல் ஆண்டவருக்குள் நம்மை ஆற்றல் படுத்தி கொள்வது மிக சிறப்பானது. ஓர்

அழகான குட்டிக்கதை ஒரு மனிதன் ஞானியிடத்தில் போய் நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், நான் மகிழ்ச்சியாக இருக்க என்னுடைய பிரச்சினைகள் எல்லாம் தீர வேண்டும், என்னுடைய பிரச்சனைகள் எப்பொழுது தீருகிறன்றதோ அப்போதுதான் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும், மேலும் என் எல்லாப் பிரச்சனைகள் தீர ஒரு வழி காட்டுங்கள் என்றார். அதற்கு ஞானி இன்று இரவு இங்கே தங்குங்கள் நம்முடைய தொழுவத்திலே நூறு மாடுகள் இருக்கின்றன இந்த நூறுமாடுகளை இன்று இரவு நீ தூங்க வைத்த பிறகு தான் தூங்க வேண்டும் என்றார் மறுநாள் காலை விடிந்தவுடன் ஞானியை சந்திக்க அந்த மனிதர் சென்றார். ஞானி அவரைப் பார்த்தவுடனே என்ன நேற்றிரவு நீ தூங்கவே இல்லையா இப்படிச்சோர்வாய் காணப்படுகிறாய் என்றார் அவரோ எப்படித் தூங்க முடியும் நேற்று முழுவதும் ஒவ்வொரு மாடாக தூங்க வைக்கும் முயற்சி செய்தேன் ஒரு மாடு தூங்க உட்கார்ந்தவுடன் இன்னொரு மாடு எழுந்து கொண்டது இப்படியே இரவு முழுவதும் ஓடினது எல்லா மாடுகளையும் என்னால் தூங்க வைக்க முடியவில்லை என்றார் அப்போது குரு சிரித்துக்கொண்டே சொன்னார் இதுதான் உன்னுடைய வாழ்க்கை உன்னுடைய வாழ்க்கையில் நூறு பிரச்சனைகள் இருக்கலாம் இந்த நூறு பிரச்சனை முடிந்தால் தான் நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று சொன்னால் உன்னால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் நீ மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியுடனே உன்னுடைய பிரச்சனைகள் ஒவ்வொன்றாய் முடிய ஆரம்பித்துவிடும் என்றார். நம்முடைய வாழ்விலும் பிரச்சனைகளைக் குறித்து கவலைப்படாமல் உங்களை இலக்கை நோக்கிப் பயணமாகிட தொடங்குங்கள் ஆண்டவர் நம்முடன் இருக்கிறார் அவர் இழந்தவற்றைத் திருப்பியளிக்க ஆற்றல் நிறைந்தவர். தாவீது இழந்து போனதெல்லாம் அவற்றையும் திருப்பிக் கொண்டது போல இந்த மாதத்தில் தாங்கள் இழந்து போன எல்லாவற்றையும் திருப்பிக் கொள்ள ஆண்டவர் ஒரு வாய்ப்பளிக்கிறார். இந்த மாதம் நமக்கு மீட்டெடுக்கும் மாதமாக, இழந்து போனதைத் திரும்பப்பெறுகின்ற ஒரு மாதமாக ஆண்டவர் நமக்கு ஆசிர்வதித்து தர இருக்கிறார். யோவேல் இரண்டாம் அதிகாரம் 25 ஆம் வசனத்தில் நாம் வாசிக்கும் பொழுது அங்கே அவருடைய வாழ்வில் இருந்து அழிவுகள் எல்லாவற்றையும் ஆண்டவர்மாற்றி ஒரு புதிய செயல்களை உருவாக்குவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார் அதே ஆண்டவர் நம்மும் வாழ்வியல் ஒன்பது மாதங்கள் இழுந்து போனவாழ்த்துகள் ஒன்பது மாதங்கள் தவறவிட்ட நன்மைகளை இந்த பத்தாம் மாதத்தில் திருப்பித் தர வல்லவராய் இருக்கிறார் இந்த நம்பிக்கையோடு

இந்த மாதத்தை நாம் தொடங்குவோம் ஆண்டவர் நம்மை வாழ்த்தி வழிநடத்துவாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.

# Restoring GOD



In every generation, there comes a time when people drift away from God sometimes through neglect, sometimes through distraction, and at times through deliberate choices. Yet, the heart of God always longs for His children to return to Him. To Restore God is not about bringing Him back, for He has never left it is about restoring our own hearts and lives to His rightful place.

To "restore God" is not to bring Him back from absence, for God has never left us. He is eternal, unchanging, and ever-present. Rather, it means restoring our hearts, our priorities, and our lives back to Him. It is about giving God His rightful place first in our affections, first in our decisions, and first in our worship.

In our busy life, we often allow other things -work, relationships, worries, or even personal ambitions to take the throne of our hearts. When this happens, we drift spiritually, feeling distant from God. But Scripture reminds us:

- “Return to Me, and I will return to you,” says the Lord Almighty. (Malachi 3:7)

- “Restore to me the joy of Your salvation and grant me a willing spirit, to sustain me.” (Psalm 51:12)

When we restore God to His rightful place, peace returns to our hearts, direction becomes clear, and joy flows again. We begin to walk not in our own strength, but in the strength of the Lord who restores, redeems, and renews.

Life’s trials, our own choices, and seasons of neglect can sometimes leave us feeling spiritually empty and far from God. Yet the Lord is a God of restoration. He promises in Joel 2:25–26, “I will restore to you the years that the swarming locust has eaten. You will have plenty to eat, until you are full, and you will praise the name of the Lord your God.” These verses remind us that no matter what has been lost time, peace, joy, or closeness with Him God is able to restore it in abundance. Restoring God in our lives is about turning back to Him, allowing Him to renew our hearts, and giving Him His rightful place as Lord over all.

In the book of Joel, the people of Israel were called to repentance, and God’s answer was a promise: “I will restore to you the years that the locust has eaten” (Joel 2:25). This is more than a word of comfort-it is a call to turn back, to give God His rightful place. Restoring God means surrendering what has been broken or wasted and allowing Him to bring healing, renewal, and overflowing blessing into our lives.

Contributed by
Mrs.Nancy Augustine



# வயதுவந்த வாழ்க்கைக்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்

**நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்.** (நீதி 22:6).

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், “என்னுடைய தாத்தா யார் என்பது எனக்குத் தெரியாது; ஆனால் எனது பேரன் எப்படி இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன்” என்று கூறுகிறார். ("I don't know who my grandfather was; I am much more concerned to know what his grandson will be." Abraham Lincoln)

மனிதக் குழந்தைகள்தான் உலகில் பரிதாபமான ஜென்மங்கள். மற்ற உயிரினங்களைவிட அதிகக் காலம் பிறரைச் சார்ந்திருப்பது மனிதக் குழந்தைகள்தாம். ஆகையால்தான் குழந்தைகளை “இயற்கையான அடிமைகள்” (Natural slaves) என்று கூறுவது வழக்கம். அவர்களுடைய விருப்புவெறுப்புகளையும், குணநலன்களையும், அவர்களைச் சுற்றியுள்ள மனிதர்கள்தான் உருவாக்குகிறார்கள். பெரியவர்களாக உலகில் வாழ்வதற்குக் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் பெற்றோர்களுக்குப் பெரும் பங்குண்டு.

கலில் ஜிப்ரான் (Kahil Gibran) தம்முடைய "The Prophet" என்ற புத்தகத்தில் எழுதியுள்ள ஒரு பகுதியைத் தமிழில் மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன்.

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகளல்ல
உயிர் வாழும் உந்துதலில் மகன்களாய், மகள்களாய்
தாங்களாய் வந்தவர்கள்
உங்கள் வழியாய் வந்தவர்கள்; அவர்கள்
உங்களிலிருந்து வந்தவர்களல்லர்
உங்களுடன் இருந்தாலும் அவர்கள் உங்களுடையவர்களல்ல
உங்களுடைய அன்பை அவர்களுக்குக் கொடுக்கலாம்,
சிந்தனையையல்ல

ஏனெனில் அவர்களுக்கென்று
சொந்த சிந்தனைகளுண்டு
உங்களுடைய வீட்டில் அவர்களின் உடல்கள் இருக்கலாம்,
ஆத்துமாக்களல்ல ஏனென்றால்,
அவர்களுடைய ஆத்துமாக்கள் நாளைய வீட்டில் வசிக்கின்றன
அந்த வீட்டிற்கு நீங்கள் செல்ல முடியாது, கனவில்கூட முடியாது
அவர்களைப் போல் மாற நீங்கள் முயலலாம்.
அவர்கள் உங்களைப் போலாவாரெனக் கருதற்க ஏனென்றால்
வாழ்க்கை பின்னோக்கிச் செல்வதுமில்லை,
நேற்றோடு நிற்பதுமில்லை

(Your children are not your children They are the sons and daughters of Life's longing for itself They came through you but not from you And though they are with you yet they belong not to you You may give them your love but not your thoughts, For they have their own thoughts.

You may house their bodies but not their soul For their souls dwell in the house of tomorrow. Which you cannot visit, not even in your dreams.

You may strive to be like them, but seek not to make them like you, For life goes not backward nor tarries with yesterday.

by Kahil Gibran in his Book The Prophet

திருமணம் என்னும் புனித உறவுக்குள் இணைக்கப்பட்டுக் கணவன் மனைவியான ஆணும் பெண்ணும், குழந்தை என்ற உயிருள்ள உருவத்தை இந்த உலகில் உருவாக்குவதற்கு, இறையுடன் இணைந்த பங்காளர்களாகச் (Co-partners) செயல்படுகிறார்கள்.

இந்த உலகில் பிறக்கும் அனைவருமே இறைவனின் அநாதி சித்தத்தின்படியும், தீர்மானத்தின்படியும் பிறந்தவர்களே. மனிதர்கள் பிறக்குமுன்பே அவர்கள் பெயரிடப்பட்டிருக்கிறார்கள் என்று பிரசங்கி கூறுகிறார். “இருக்கிறவன் எவனும் “இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப் பட்டிருக்கிறான்” (பிரசங்கி6:10).

பிறக்குமுன்பே ஆண்டவரால் பெயரிடப்பட்டுப் பிறந்த குழந்தைகளைக் குடும்பத்தில் முழு மனதுடன் வரவேற்று, உலக வாழ்க்கையை வாழ்வதற்கும், நித்திய வாழ்க்கைக்குத் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்வதற்கும் அன்புடன் பயிற்றுவிப்பது பெற்றோர்களுடைய உணவும், உடையும், உறைவிடமும், பெற்றோர்களின் கடமை முடிந்து கடமையாகும். பெற்ற குழந்தைக்கு உணவும் கல்வியும் கொடுத்துவிட்டால் மட்டும் விடுவதில்லை. அவற்றுடன், பிள்ளையின் உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி, ஆவிக்குரிய வளர்ச்சியில் ஆதரவு தந்து தரவு தந்து ஒரு முதிர்ச்சியடைந்த ஆணாக பெண்ணாகப் பக்குவமடையச் செய்வது பெற்றோர்களின் கடமையாகும்.

## மூன்று காலகட்டங்கள்

பிள்ளைகள் முதிர்ச்சியடையும் வரையிலான காலகட்டங்களை மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. பெற்றோர்களைச் சார்ந்து வாழும் குழந்தைப் பருவம் (dependent childhood stage).

2. சுதந்திரத்துடன் வாழும் இளமைப் பருவம் (independent teenage stage).

3. ஒருவரையொருவர் சார்ந்து வாழும் முதிர்ச்சியடைந்த பருவம். (interdependent adult life).

முதிர்ச்சி பெறவிருக்கும் மூன்றாவது காலகட்டத்தைப் பிள்ளைகள் எட்டுமுன், முதல் இரண்டு காலகட்டங்களிலும் பிள்ளைக்கு நிபந்தனையற்ற அன்பும், போதுமான சுதந்திரமும், உறுதியான ஒழுக்கப் பயிற்சியும் கொடுப்பது பெற்றோர்களின் பொறுப்பாகும்.



# இலண்டன் மிஷனெரி சங்கம் (L.M.S)

**திருப்பணி வளர்ச்சியடைதல்**

ரிங்கல்தோபே, திருச்சபையின் எதிர்காலம் குறித்து அதிகமாய்க் கவலைப்பட்டார். அவர் அறிந்ததற்கும் மேலாகத் திருச்சபையை வேதமாணிக்கம் தட்டியெழுப்பிவிட்டார். உண்மையான ஊழியராய் அருட்பணியைத் தொடர்ந்து செய்தார். லண்டனிலிருந்து நிதியுதவி நின்றுபோயிற்று. ரிங்கல்தோபே வாங்கியிருந்த நிலத்தைப் பயிர் செய்து, கிடைத்த வருமானத்தைக்கொண்டு வேதமாணிக்கம் அருட்பணியைத் தொடர்ந்தார். இவரது மகன் கணக்கு வழக்குகளைக் கவனித்து வந்தார். அவர் நேர்மையான, திறமைமிகுந்த, கண்ணியமான பொருளாளர் என்று பெயர் பெற்றார். அருள்திரு. சார்லஸ் மீட் (Mead) 1818-இல் மைலாடி வந்து அருட்பணிப் பொறுப்பை ஏற்கும் காலம் வரை, வேதமாணிக்கமும் அவர் மகனும் அருட்பணியின் பொறுப்பாளர்களாக இருந்தனர். அவரிடம் பணியின் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டாலும், 1827-ஆம் ஆண்டு தாம் மரிக்கும் நாள் வரை மைலாடி சபையைக் கவனித்து வந்தார். அவர் அதிக நேரத்தை இறைவேண்டலில் கழித்தார். தமது கைகளை நோயாளிகளின்மீது வைத்து இறைவேண்டல் செய்யும்போது அவர்கள் சுகம் பெற்றனர்.

அருள்திரு. மீட் வந்தபின் மற்ற மிஷனெரிமார் வந்தனர். நாகர்கோயில், அருட்பணியின் தலைமையிடமாக மாறியது. அங்கிருந்து அதற்குச் சற்று

வடக்கில் உள்ள திருவிதாங்கூர் வரை அருட்பணி விரிவடைந்தது. நற்செய்திப் பணியும் கல்விப் பணியும் தொடங்கப்பட்டன. சுகமளிக்கும் பணிக்கு முன்னோடிகள் எல்.எம்.எஸ் எனலாம். சுகமளிக்கும் பணி நற்செய்திப் பணியின் ஓர் அங்கம். குடிசைத்தொழில் போன்ற சிறு தொழில்களில் இச்சங்கம் ஆர்வம் செலுத்தியது. லேஸ் (Lace) செய்தல், வண்ண நூல்களால் தையல் வேலை செய்தல் போன்றவை கற்பிக்கப்பட்டன. இவற்றின்மூலம் பெற்ற பணம் அருட்பணிக்கு உதவியது. இதனால் மிஷன் தன் காலில் நிற்கும் வலிமையைப் பெற்றது. ஆதரவற்ற அநேகப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் வாழ்வளித்தது.

## பிறமொழி பேசும் பகுதிகளில் அருட்பணி

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமாகிய திராவிட மொழிகள் பேசும் தென்னிந்தியப் பகுதிகளிலும், இலங்கையிலும் பணியைத் தொடங்கிய முதல் மிஷன் எல்.எம்.எஸ் என்பது குறிப்பிடத்தக்கது. முதன் முதலாவதாக வந்த மிஷனெரிமாரில் டச்சு தெரிந்த மூவர் இலங்கைக்குச் சென்றனர் அல்லவா? ஒருவர் யாழ்ப்பாணத்தில் ஏழாண்டுக் காலம் பணிபுரிந்தார். இவரும் மற்றவர்களைப் போலவே எல்.எம்.எஸ் ஜை பிரிந்து, டச்சு சபையொன்றின் ஆயர் ஆனார். இலங்கையில் தொடங்கப்பட்ட அருட்பணி நின்றுபோனது.

மற்ற இருவர் சிறிதுகாலம் சென்னையில் தங்கியிருந்த பின் தெலுங்கு மொழி பேசும் விசாகப்பட்டணம் சென்றார்கள். இங்குச் செல்லுமாறு ஆலோசனை கூறியவர் யார் தெரியுமா? பாப்திஸ்ட் மிஷனின் வழிகாட்டியான வில்லியம் கேரி தான். அங்குப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. திருமறையைத் தெலுங்கில் மொழியாக்கம் செய்திட ஆரம்பித்தனர். இருவரும் ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே இறந்துவிட்டனர். அவர்களுக்குப் பதிலாக மிஷனெரிமார் நியமிக்கப்பட்டபோதிலும் சுமார் 27-ஆண்டுகளாக இங்கு யாரும் திருமுழுக்குப் பெறவில்லை. அருட்பணி வளர்ச்சியடையவில்லை. விசாகப்பட்டணம் மற்ற பணித்தளங்களுடன் தொடர்பற்று இருந்தது. தெலுங்கு அருட்பணி வளர்ச்சிபெற்றது, பெல்லாரியில் அது தொடங்கப்பட்ட போதுதான்.

முதலாவது அருட்பணி செய்ய வந்தவர்கள் அறுவர் அல்லவா? அவர்கள் வந்தபின், ஆறு மாத காலம் கழித்து 1805-ல் அருள்திரு. டபுள்யு.சி.லவ்லெஸ் (Loveless) சென்னைக்கு வந்தார். அவர் சூரத்துக்குச்

செல்வதாயிருந்தது. அரசாங்கமோ அவர் சென்னையில் இந்தியரிடையே பணியாற்றுவதை விரும்பவில்லை. எனவே அவர் ஆங்கிலேயருக்கிடையே பணி செய்யவேண்டியதாயிருந்தது. மற்றவர்கள் தங்கள் பணியைத் தமிழகத்தில் செய்யலாயினர். பின்னர், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மையங்களுக்கு அருட்பணி பரவியது.

இறுதிக் கட்டமாகக் கன்னடமொழி பேசும் பகுதிகளில் ஊழியம் ஆரம்பமாயிற்று. 1810-இல் அருள்திரு. ஜான் ஹேண்ட்ஸ் (Hands) சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவர் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அங்குச்செல்ல கிழக்கிந்தியக் கம்பெனி அனுமதி அளிக்கவில்லை. இருப்பினும் இக்கம்பெனியில் பணியாற்றிய ஆயர் ஒருவர் இவர் பெல்லாரிக்குச் செல்ல ஏற்பாடு செய்தார். அங்கு ஐரோப்பியர் சிலர் இருந்தனர். எனவே சிறிய சபை ஒன்றை அங்குத் தொடங்குவது எளிதாயிற்று. ஆனாலும் இவர் இந்தியரிடையே ஊழியம் செய்ய வாஞ்சையாய் இருந்தார். இதனால் கன்னட மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இம்மொழியில் அப்போது இலக்கண நூல் ஏதுமில்லை. எனவே இவரே முயன்று கன்னட இலக்கண நூல் ஒன்றைத் தமக்கென எழுதிக்கொண்டார். இரண்டாண்டுக்குள் மூன்று நற்செய்தி நூல்களை மொழிபெயர்த்தார். பதினைந்து ஆண்டுகள் மொழிபெயர்ப்புப் பணி தொடர்ந்து திருமறையின் கன்னட மொழிபெயர்ப்பு அச்சாவதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டது. உற்சாகமிக்க இந்த ஊழியர் ஓய்வின்றி உழைத்தார். தமது நேரத்தைப் பெருமளவில் நற்செய்திப் பணிக்கெனச் செலவிட்டார். நற்செய்திப் பணிக்காகப் பல பயணங்களை மேற்கொண்டார். இவற்றின் விளைவாகப் பெல்காம், பெங்களூர், கடப்பை ஆகிய பகுதிகள் பணித்தளங்களாக மாறின. 1825-ல், மிஷனெரிமார் அவ்விடங்களில் அமர்த்தப்பட்டனர்.

அருட்பணி தொடங்கிய ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகவே, தென்னிந்தியாவில் மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் பேசும் பகுதிகளில் அருட்பணி விரிவடைந்தது. வேறெந்தமிஷன் சங்கமும் இதற்கு ஈடாகப் பணியாற்றினர் என்று கூறிட முடியாது. எனினும் சி.எம்.எஸ் இதுபோன்றே முனைப்பாகச் செயல்பட்டு வந்தது எனலாம்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

யாத்திராகமம்

அன்புக்குரியவர்களே இந்த மாதத்திற்கான வினாக்கள் யாத்திராகமம் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள, இதற்கான பதில்களை இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள் ஆயருக்கு tamilchurchcsisharjah@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியாகவும் அல்லது 0507032150 Whatsapp வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. பண்டசாலைப் பட்டணங்கள் எவை?
2. மருத்துவச்சிகள் யார்?
3. சிப்போராளின் கணவர் யார்?
4. அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று பெயரிடப்பட்டவர் யார்?
5. கர்த்தரைப் பரீட்சை பார்த்த இடம் ?
6. கர்த்தருக்கு பலியிட எத்தனை நாள் வனாந்திர பயணம் மேற்கொள்ள வேண்டும்?
7. எத்தனை புருஷர்கள் பிரயாணம் பண்ணினார்கள்?
8. சுக்கோத்திலிருந்து எங்கு பாளயமிறங்கினார்கள்?
9. எத்தனை இரதங்கள் பின்தொடர்ந்தன?
10. பெண் தீர்க்கதரிசி யார் ?
11. தேனிட்ட பணிகாரம் எது?
12. ரெவிதீமிலே எது இல்லை?
13. எதினால் எக்காளசத்தம் உண்டாயிற்று?
14. யார் எங்களோடே பேசாதிருப்பாராக?
15. பீறுண்ட மாம்சத்தை யாருக்கு போட வேண்டும்?
16. மோசேயுடன் தேவ பர்வதத்திற்கு போனது யார்?
17. தூபபீடம் எந்த மரத்தால் உண்டாக்கபட்டது?
18. வருஷமுடிவிலே எந்த பண்டிகை ஆசரிக்க வேண்டும்?
19. ஏந்த மரத்தில் வாசஸ்தலம் உண்டாக்கப்பட்டது?
20. மார்ப்பதக்கத்தையின் அளவு?

## கடந்த மாத வினாக்களுக்கான பதில்கள்

1. காயீனைக் கொல்லுகிறவன் (4:14 )
2. மெத்தூசலா (5:25)
3. பாஷை (11:9)
4. தேராகு (11:31)
5. ஏலோமின் ராஜா கெதர்லாகோமே, ஜாதிகளின் ராஜா திதியாலோ, சிநெயாரின் ராஜா அம்ராப்பேலோடு, ஏலாசாரின் ராஜா அரியோகோடு. (14:9)
6. லாபான் யாக்கோபும் உடன்படிக்கைப்பண்ணிக் கொண்ட இடம் (31:47)
7. பெத்தேல்க்குச் சமீபமாயிருந்த கர்வாலி மரம், அல்லோன்பாகூத் என்னும் பெயர் (35:8)
8. சேரா(38 : 30 )
9. பென்யமீன் (49:27)
10. யோசேப்பு (50:25)

**கடந்த செப்டம்பர் மாதம் கேள்விகளுக்குப் பதிலளித்த அனைவருக்கும் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துகொள்கிறோம்.**

1. Dr.Jone Bino
2. Mrs.Florence Anantharaj
3. Mrs.Kavitha Rasu
4. Mrs.Veni Winston
5. Ms.Kavitha John Helen
6. Mrs.Ahiya
7. Mrs.Punitha Arul
8. Ms.V.Selina Stephen
9. Ms.Stella

**Children's Corner - Colouring**

1. Dafina Jeziah
2. Jefin
3. Jafan
4. S.Sanhedrin

# The Lord Who Restores

Have you ever broken your Gadget or lost something special? It feels very sad, doesn't it? But imagine if someone fixed your toy, or gave you back something even better than what you lost. That's what our Lord does! He is the Lord who restores—He fixes broken things, broken hearts, and broken lives.

**Let's look at three Bible examples where God showed His power to restore.**

### 1. Joseph – From Prison to Palace

Joseph's brothers were jealous of him and sold him as a slave. Later, he was even thrown into prison for something he didn't do. It looked like Joseph's life was ruined. But God restored him! One day, Joseph became the Prime Minister of Egypt and helped save many people from hunger (Genesis 41:39–41).

**Even when people treat us badly,
God can lift us up and give us a bright future.**

### 2. Naaman – Restored from Sickness

Naaman was a mighty soldier, but he had a terrible skin disease. He heard about the prophet Elisha and followed God's instructions to dip in the Jordan River seven times. When he obeyed, God healed him completely (2 Kings 5:14).

**When we listen to God and obey, He restores our health and blessings.**

### 3. Jairus' Daughter – Restored to Life

One day, a man named Jairus begged Jesus to heal his little daughter. Sadly, the girl died before Jesus arrived. But Jesus took her by the hand and said, "Little girl, get up!" Immediately she came back to life (Mark 5:41–42).


**Nothing is impossible for Jesus. He can even restore life!**

Children, our Lord loves you so much. Whenever you feel something is lost, broken, or hopeless-don't worry! Pray and trust Him. Jesus is the Lord who restores. He can give you back more than what you lost, heal you when you are sick, and fill your heart with joy again.

*Memory Verse :*

"I will restore to you the years the locust has eaten." - Joel 2:25

# Coloring Page




*Contributed By*
**Sathish Rajkumar**

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this Month.
+971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st Oct**
MASTER. SHADRACH RICKY MATTHIO
MRS. TILAKAVATHI
MR. MANUEL RAJ JOHN

**2nd Oct**
MR. A. AKASH JEBANATH

**3rd Oct**
MASTER. RATHEESH GNANADOSS
MRS. ESTHER KALA.A
MRS. EBSIBA

**4th Oct**
MASTER. SAMUEL JEBA DOSS

**5th Oct**
MRS. JUDITH BLESSY BERNICA
MR. FEDRICK LUTHER ASIRVATHAM SIMON

**6th Oct**
MRS. VANITHA P.
MRS. AGNES STELLA
MISS. JUANA JULIET

**7th Oct**
MRS. R.MERITA JEYAKUTTI
MR. ROBERT
MASTER. KAVIN IMMANUEL
MRS. ANUSHYA

**8th Oct**
MASTER. AMOS JERE
MR. ROSE ROBIN .S

**9th Oct**
MRS. MARIA THERASA RANI.A

**10th Oct**
MR. AUGUSTINE VIJAYAN DEV PETER
MR. JEBAHAR
MRS. BENIL SHAD.G
MR. J. JOHIN IMMANUEL
MR. S.RUBAN

**11th Oct**
MRS. JEBA SHALU JEGAN

**12th Oct**
MRS. JASMINE MANGALRAJ
MR. JEBAS JEBARAJ

**13th Oct**
MISS. KAREN EUNICE K.
MASTER. DIYAS DINESH.

**14th Oct**
MRS. PUSHPALATHA LATHA
MR. PRAVIN JONES

**16th Oct**
MASTER. JESTUN PAUL DASS
MR. ALEX JEYARAJ
MR. SHYAM BABU

**17th Oct**
MRS. MADONA ANBAZHAGAN
MASTER. RIJO CAREY

**18th Oct**
MR. SUNNEY JOYAL S.
MISS. JENNIFAR LIGHTEN
MR. JOSHUA VENUGOPAL E.
MR. JAMES WESLY

**20th Oct**
MR. DEIVASIGAMANI S.
MISS. RENY LYDIA

**21st Oct**
MASTER. JEFFRY G.
MASTER. JEFFREY

**22nd Oct**
MASTER. EMMANUEL CARSTEN Y.
MISS. GRACIA LAUREN
MASTER. JOEWIN DANIEL RAJ

**23rd Oct**
MRS. THANGAMANI ANBALAGAN
MASTER. JADEN SOLOMON
MR. GRASELIN SOORYA

**24th Oct**
MASTER. AREN PETER AUGUSTINE
MRS. EARLY STAR SATHIYA
MR. JOHN JOSHUA
MISS. ADRINA ISAC

**26th Oct**
MR. PRAVINTH SAMUEL VETHANAYAGAM
MRS. K. HELINATH PAULINE

**27th Oct**
MRS. JOANNA KEZIAH

**28th Oct**
MISS. STENI KOIL RAJ
MASTER. JOHN ABRAHAM
MASTER. ADRIEL JONAS
MISS. EDLYN
MRS. TAMIL ELAKYA

**29th Oct**
MR. RAJESH KUMAR C.
MRS. R. MONICA RAJA KUMAR

**30th Oct**
MISS. JENEFA SUNDARA RAJAN
MISS. CATHERINE VIJAY ANAND
MASTER. JASON RAJ J.
MRS. SHERMI MOL

**31st Oct**
MR. EDWIN D.
MASTER. HANSLIN DYLAN

## Wedding Anniversary

**6th Oct**
MR. PREM TITUS S. & MRS. DIVINA PREM K.

**9th Oct**
MR. SHAJAN ABRAIN RAJ & MRS. ANU PRIYA. G

**19th Oct**
MR. EDWIN D. & MRS. SUNI SMILA J.
MR. YOVAN MAHENDRAN & MRS. SUBHA

**20th Oct**
MR. GRASELIN SOORYA & MRS. MISTICA REFFIN

**22nd Oct**
MR. CHRISTOPHER SANTHA SEELAN & MRS. VANITHA

**25th Oct**
MR. SOLOMAN VIJAY ANAND S. & MRS. ADELINE SOLOMAN

**26th Oct**
MR. SANTHA KUMAR SELVARAJ & MRS. ARUL RUBAVATHY

**27th Oct**
MR. KINGSTON V. & MRS. JULIE VIOLET GRACE K.

**29th Oct**
MR. CHRISTOPHER ASIR DOSS S. & MRS. KOHILA RANI V.

**30th Oct**
MR. D.VICTOR GNANARAJ & MRS. H. JESCELIN

# DAILY BIBLE READING OCTOBER 2025

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 Wed | யாத்திராகமம் 3 : 1-14 | அப்போஸ்தலர் 1 : 1 14 |
| 02 Thu | சங்கீதம் 80 | அப்போஸ்தலர் 1:15 2 :13 |
| 03 Fri | ஏசாயா 61 : 1-11 | அப்போஸ்தலர் 2 : 14 35 |
| 04 Sat | 1 பேதுரு 2 : 1-10 | அப்போஸ்தலர் 2 : 36 47 |
| 05 Sun | யோவான் 17 : 1-8 | அப்போஸ்தலர் 3 : 1 16 |
| 06 Mon | யோவான் 12 : 20-32 | அப்போஸ்தலர் 3 :174 : 12 |
| 07 Tue | உபாகமம் 7 : 1-11 | அப்போஸ்தலர் 4 : 13 31 |
| 08 Wed | எபேசியர் 5 : 18-20 | அப்போஸ்தலர் 4 : 32 5 : 11 |
| 09 Thu | சங்கீதம் 146 | அப்போஸ்தலர் 5 : 12 32 |
| 10 Fri | 2 சாமுவேல் 9 : 113 | அப்போஸ்தலர் 5 : 33 6 : 7 |
| 11 Sat | அப்போஸ்தலர் 9 : 32-35 | அப்போஸ்தலர் 6 : 8 7 : 16 |
| 12 Sun | மாற்கு 3 : 1-6 | அப்போஸ்தலர் 7 : 17 43 |
| 13 Mon | யோவான் 17 : 13-17 | அப்போஸ்தலர் 7 : 44 8 : 8 |
| 14 Tue | ஆமோஸ் 9 : 1-12 | அப்போஸ்தலர் 8 : 9 25 |
| 15 Wed | எபேசியர் 4 : 1-10 | அப்போஸ்தலர் 8 : 26 9 : 9 |
| 16 Thu | சங்கீதம் 98 | அப்போஸ்தலர் 9 : 10 31 |
| 17 Fri | தானியேல் 1 : 1-17 | அப்போஸ்தலர் 9 : 32 10 : 8 |
| 18 Sat | அப்போஸ்தலர் 6 : 1-7 | அப்போஸ்தலர் 10 : 9 33 |
| 19 Sun | யோவான் 1 : 35-42 | அப்போஸ்தலர் 10 : 34 11 :18 |
| 20 Mon | மத்தேயு 16 : 13-20 | அப்போஸ்தலர் 11 : 19 12 :12 |
| 21 Tue | உபாகமம் 4 : 1-10 | அப்போஸ்தலர் 12 : 13 13 :12 |
| 22 Wed | 1 கொரிந்தியர் 1 : 10-18 | அப்போஸ்தலர் 13 : 13 37 |
| 23 Thu | சங்கீதம் 89 : 1-18 | அப்போஸ்தலர் 14 : 1 18 |
| 24 Fri | யாத்திராகமம் 7 : 1-7 | அப்போஸ்தலர் 14 : 19 15 :11 |
| 25 Sat | ரோமர் 13: 1-7 | அப்போஸ்தலர் 15 : 12 41 |
| 26 Sun | யோவான் 18 : 33-38 | அப்போஸ்தலர் 16 : 1 18 |
| 27 Mon | யோவான் 15 : 11-17 | அப்போஸ்தலர் 16 : 19 40 |
| 28 Tue | 1 சாமுவேல் 1 : 19-28 | அப்போஸ்தலர் 17 : 1 34 |
| 29 Wed | ரோமர் 11 : 1-33 | அப்போஸ்தலர் 18 : 1 22 |
| 30 Thu | சங்கீதம் 91 | அப்போஸ்தலர் 18 ; 23 19 : 10 |
| 31 Fri | லூக்கா 2 : 22-40 | அப்போஸ்தலர் 19 : 11 30 |

# ஆராதனை தியானப் பொருள்
## அக்டோபர்- 2025

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு Oct-5 2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 61 : 1-11<br>1 பேதுரு 2 : 1-10<br>யோவான் 17 : 1-8<br>சங்கீதம் 80 | Laity Sunday<br>அனைத்துப் பற்றாளரும் திருத்தொண்டரே<br>Priesthood of All Belivers |
| ஞாயிறு Oct-12 2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | 2 சாமுவேல் 9 : 1-13<br>அப்போஸ்தலர் 9 : 32-35<br>மாற்கு 3 : 1-6<br>சங்கீதம் 146 | Sunday for the Mentally and Physically Challenged and Pallative Patients<br>இயலாமை: மாண்புடன் பேணுதல்<br>Disability : Care and Honour |
| ஞாயிறு Oct-19 2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | தானியேல் 1 : 1-17<br>அப்போஸ்தலர் 6 : 1-7<br>யோவான் 1 : 35-42<br>சங்கீதம் 98 | Youth Sunday<br>கிறிஸ்துகொண்ட இளையோரின் செயல்வீரியம்<br>Youth with Christ in Action |
| ஞாயிறு Oct-26 2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 7 : 1-7<br>ரோமர் 13: 1-7<br>யோவான் 18 : 33-38<br>சங்கீதம் 89 : 1-18 | Reformation Sunday<br>கடவுளின் இறையாண்மை, நீதி & அமைதியைக் கொண்டாடுதல்<br>Celebration of God's Sovereignty, Justice and Peace |

